06.03.2024

**SC.No.- 130/2021**

**PW- 1 – திரு.சூர்யா**

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1 சத்தியமாக சொல்கிறேன். நான் சொன்னம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் வழக்கறிஞராக ஒசூர் நீதிமன்றங்களில் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எங்களுக்கும் எதிரிகளுக்கும் நில தகராறு 2011 முதல் உள்ளது. எனது அப்பா சொத்து தொடர்பாக தேன்கனிக்கோட்டை உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து இருந்தார். அதனால் எங்களுக்கும் எதிரிகளுக்கும் முன் விரோதம் இருந்தது. 2017ம் வருடம் நான் ஆந்திராவில் உள்ள சட்டக்கல்லூரியில் படித்து கொண்டு இருந்தேன். எனது கல்லூரி பெயர் டாக்டர் அம்பேத்கர் கிலோபல் லா இன்ஸ்டியூட் திருப்பதி. 2017ல் இன்டன்சிப்க்காக வழக்கறிஞர் வெங்கடேஷ் குமாருடன் ஒசூரில் நான் நீதிமன்றத்திற்கு சென்று வந்துகொண்டு இருந்தேன். கடந்த 19.02.2017 அன்று காலை 8.30 மணிக்கு எனது வீட்டில் எனது அம்மா காஞ்சாலம் கிராமத்தில் உள்ள எனது உறவினர் இறந்துவிட்டதாக சொல்லி கொண்டு இருந்தார். எனது அம்மா தன்னை அந்த இறப்பிற்கு அழைத்து சென்று விடும்படி கேட்டார். அதனால் எனது இருசக்கர வாகனம் பதிவு எண்..டிஎன்70யு5049 ல் எங்கள் வீட்டில் இருந்து காஞ்சாலம் இறப்பு வீட்டிற்கு எனது அம்மாவை அழைத்து சென்று அங்கு விட்டுவிட்டு மறுபடியும் திரும்ப இராயக்கோட்டை அருகில் வந்து கொண்டு இருந்தேன். கோடிபுதுர் மாரியம்மன் கோவில் அருகில் வந்த போது காலை சுமார் 9.00 மணி இருக்கும். எனக்கு எதிராக எதிரிகள் இருசக்கர வாகனத்தில் வந்து எனது வண்டியை தடுத்தார்கள். எதிரி முருகன் கொடுவாளை எடுத்து வந்து எனது கழுத்தை வெட்ட வந்தார். நான் இடது பக்கம் சாய்ந்து விட்டேன். அவர் வீசிய அருவாள் எனது இடது காலில் முட்டிக்கு அருகில் வெட்டி விட்டது. நான் வண்டியில் இருந்து சாய்ந்தேன். எனது பாக்கெட்டில் இருந்து போன் கீழே விழுந்தது. அதை எதிரி செல்வராஜ் எடுத்து தரையில் போட்டு உடைத்துவிட்டார். செல்வராஜ் அவன் ஓடிவிடுவான் அவன் காலை வெட்டு டா முருகா என்று சொன்னார். முருகன் கொடுவாளால் எடுத்து எனது இடது காலில் முழுங்கால் பகுதியில் வெட்டி விட்டார். நான் சத்தம் போட்டேன். எனது தாய்மாமா மாது என்பவர் பக்கத்து நிலத்தில்

விவசாயம் செய்து கொண்டு இருந்தார் அவர் சத்தம் கேட்டு தடுக்க ஓடி வந்தார். அக்கம் பக்கம் இருந்தவர்களும் தடுப்பதற்காக ஓடி வந்தார்கள். ஆட்கள் வருவதை பார்த்தவுடன் எதிரிகள் இருவரும் இனி நிலம் பக்கம் வந்தால் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்கள். அதன்பிறகு அவர்கள் வந்த இருசக்கர வாகனத்தில் சென்று விட்டார்கள். எனக்கு ரத்தம் அதிகமாக வந்ததால் எனது மாமா மாது இருசக்கர வாகனத்தில் என்னை அழைத்து கொண்டு இரயாக்கோட்டை சுதாகர் மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். சம்பவம் பற்றி எனது மாமா தொலைபேசி மூலம் வீட்டில் உள்ளவர்களுக்கு தகவல் சொன்னார்கள். வழக்கறிஞர் வெங்கடேஸ் குமாருக்கும் தகவல் சொன்னார்கள். இராயக்கோட்டை சுகாதார நிலலையத்தில் எனக்கு முதல் உதவி சிகிச்சை வழங்கினார்கள். காயம் அதிகாமாக இருப்பதால் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு என்னை அழைத்து செல்லும படி சொன்னார்கள். 108 ஆம்புலன்ஸ் வருவதற்கு காலதாமதம் ஆனதால் வழக்கறிஞர் வெங்கடேஷ் குமார் அவருடைய இருசக்கர வாகனத்தில் என்னை கிருஷ்ணகிரி அரசு மருத்துவனைக்கு அழைத்து சென்றார். எனக்கு கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை செய்தார்கள் அன்று மாலையில் இராயக்கோட்டை போலிசாரிடம் நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த புகார் வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவது தான். அது **அ.த.சா.ஆ–**1. சம்பவத்தின் போது எதிரிகள் பயன்படுத்திய ஆயுதம் கொடுவாள் நீதிமன்றத்தில் உள்ளது தான். அது **சா.பொ.**1 . மறுபடியும் அதே நாள் மாருதி நர்சிங் ஓம் கிருஷ்ணகிரியில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். அந்த மருத்துவமனையில் 20 நாள் நான் சிகிச்சை பெற்றேன். ஓரளவுக்கு சரியானவுடன் நான் கல்லூரிக்கு சென்றேன். மறுபடியும் வலி அதிகமானதால் நான் கல்லூரியில் இருந்து வீட்டிற்கு வந்துவிட்டேன். ஒசூர் காவேரி மருத்துவமனையில் பரிசோதித்து பார்த்தோம். எனது கால் எலும்பு சீல் பிடித்து பலவீனமாக உள்ளது அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று சொன்னார்களா. காவேரி மருத்துவனையில் அறுவை சிகிச்சை செய்து எனது காலில் ராடு வைத்தார்கள். இது தொடர்பாக போலிசார் என்னை ஆகஸ்ட் மாதம் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) என் தந்தை முனிசாமி தேன்கனிக்கோட்டை உரிமையியல்

நீதிமன்றத்தில் நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் கேட்டு எதிரிகள் மற்றும் தினேஸ் என்பவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

2) அந்த வழக்கு 30.01.2019 ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) அந்த வழக்கின் தீர்ப்பை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

4) எதிரிகள் வந்ததாக சொல்லும் இருசக்கர வாகனத்தின் பதிவெண் வழக்கின் எந்த இடத்திலும் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

5) எதிரியால் உடைக்கப்பட்டதாக நான் சொல்லும் மைக்ரோ மேக்ஸ் கைபேசி என்னுடையது என்று என்பதை காண்பிக்க நான் பில் எதுவும் தாக்கல் செய்யவில்லை.,

6) அரசு தரப்பில் மைக்ரோ மேக்ஸ் கைபேசியின் உடைந்த பாகங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததில் இருந்து அப்படி ஒரு போன் என்னிடம் இல்லை என்பது தெரியவருகிறது என்றால் சரியல்ல.

7) நான் வைத்து இருந்த மைக்ரோ மேக்ஸ் போனில் சிம் கார்டு இருந்தது.

8) நான் அதே எண்ணில் புதிய சிம்கார்டு வாங்கினேன் ஆனால் புதிய சிம்கார்டு வாங்கியதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை.

9) புதிய சிம்கார்டு வாங்கியதற்கு ஆவணங்கள் நான் தாக்கல் செய்யாததால் எனது செல்போன் எதிரிகள் உடைத்தாக நான் சொல்வது உண்மை அல்ல என்பது தெரியவருகிறது என்றால் சரியல்ல.

10) சம்பவத்தன்று நான் சட்டையும் முழுகால் பேன்டும் அணிந்து இருந்தேன்.

11) அருவாளில் வெட்டினால் பேன்ட் துணிபகுதி வெட்டு படாமல் காலின் சதை பகுதிகள் வெட்டுப்படாது என்றால் பேன்ட் துணியும் வெட்டப்பட்டு இருந்தது காலும் வெட்டப்பட்டது.

12) பேன்ட் துணி வெட்டப்பட்டு இருந்தால் அதில் ரத்தம் பட்டு இருக்கும் என்றால் ஆமாம்.

13) வெட்டுப்பட்ட பேன்ட் காவல் துறையிடம் நான் ஒப்படைக்கவில்லை என்றால் ஆரம்ப சுகாதார நிலையத்தில் என்னை பேன்ட்டை கழட்ட சொல்லி விட்டார்கள்.

14) உண்மையில் சம்பவம் நடந்து இருந்தால் ரத்தம் பட்டதாக நான் சொல்லும் பேன்ட் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு இருக்கும் என்றால் சரியல்ல.

15) எனது ரத்தம் பி பாசிடிவ் வகையை சேர்ந்தது.

16) சம்பவ இடத்தில் எனது ரத்தம் தரையில் சிந்தி இருந்தது.

17) சம்பவ தேதியான 19.02.2017 அன்று நான் எதிரிகளை அருவாளில் வெட்டியதாக என் மீது ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம் முதல் தகவல் அறிக்கை பதவி செய்தார்கள். அந்த முதல் தகவல் அறிக்கையை உயர் நீதிமன்றம் ரத்து செய்துள்ளது.

18) அந்த குற்ற வழக்கில் 1ம் எதிரி நான் என்றும் 2ம் எதிரி இந்த வழக்கின் சாட்சி மாது என்றும், 3ம் எதிரி இந்த வழக்கின் சாட்சி சண்முகம் என்றும் சொன்னால் சரிதான்.

19) என் மீது இதச 294 பி, 323, 324, 506(2) படி வழக்கு பதிவு செய்யப்பட்டு இருந்தது என்றால் ஆமாம்.

20) அந்த குற்ற வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து அந்த வழக்கானது சிசி 62/2023 என்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு அந்த வழக்கு விசாரணை 29.05.2024 க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்றால் அப்படி இல்லை அந்த குற்ற வழக்கு ரத்து செய்யப்பட்டு விட்டது.

21) நான் சொல்வது போல் முதல் தகவல் அறிக்கை ரத்து செய்யப்பட்டு இருந்தால் தற்போது சிசி 62/2023 வழக்கு நிலுவையில் இருக்காது என்றால் சரியல்ல.

22) நான் சொல்வது போல் சம்பவம் நடைப்பெற்று இருந்தால் போலிசார் ரத்தம் படிந்த மண்ணை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைத்து இருப்பார்கள் என்றால் சரியல்ல.

23) கொடுவாள் என்பதும் கத்தி என்பதும் வேறு, என்றால் என்னை வெட்டியது கொடுவாள் தான்.

24) என்னை வெட்டியது கத்தியால் அல்ல.

25) எனது அம்மா எனது குடும்பத்தாரை ஊரை விட்டு ஒதுக்கியது தொடர்பாக இராயக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்காததால் எனது அம்மா தனிப்புகார் தாக்கல் செய்துள்ளார் என்றும் அந்த வழக்கில் 1ம் எதிரி 1ம் எதிரியாக உள்ளார் என்றால் ஆமாம்.

26) அந்த தனிப்புகார் மேலும் 11 பேர் மீது தாக்கல் செய்யப்பட்டு அந்த வழக்கு எண்.சிசி.330/2015 என்று நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம்.

27) அந்த தனிப்புகார் வழக்கில் எனது வழக்கறிஞர் வெங்கடேஷ் குமார் என்றால் ஆமாம்.

28) இராயக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில் நான் முதல் உதவி சிகிச்சை எடுத்து கொண்டதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அந்த ஆவணங்களை வைத்து

தான் கிருஷ்ணகிரி மருத்துவமனையில் என்னை சிகிச்சைக்கு அனுமதித்தார்கள்.

29) கிருஷ்ணகிரி மருத்துவமனைக்கு ஆரம்ப சுகாதார மருத்துவ ஆவணங்களை எடுத்து சென்று இருந்தால் அது பற்றிய விவரங்களை கிருஷ்ணகிரி மருத்துவமனையில் மருத்துவ ஆவணங்களில் குறிப்பிட்டு இருப்பார்கள் என்றால் நான் அந்த மருத்துவ ஆவணத்தை பார்க்கவில்லை.

30) 19.02.2017 அன்று காலை 9 முணி முதல் மதியம் 1.15 வரை நான் மருத்துவமனையில் சிசிக்சையில் இருந்ததை என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யாததால் நான் சொல்லும் சம்பவம் பொய்யானது என்றால் சரியல்ல.

31) ஒரு நபர் காலில் வெட்டப்பட்டு ரத்தம் வழிந்து கொண்டு இருக்கும் நிலையில் மருத்துவ உதவியின்றி காலை 9 மணி முதல் மதியம் 1.15 மணி வரை இருக்க முடியாது என்றால் நான் முதல் உதவி சிகிச்சை பெற்றேன்.

32) நான் வழக்கறிஞர் வெங்கடேஷ்குமார் வரும் வரை கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு செல்லவில்லை.

33) வழக்கறிஞர் வெங்கடேஷ் குமார் உடன் தான் கிருஷ்ணகிரி மருத்துவமனைக்கு சென்றேன்.

34) என்னை கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சிகிக்சையில் சேர்த்தது வழக்கறிஞர் வெங்கடேஷ் குமார் என்பது மருத்துவ ஆவணங்களில் உள்ளது.

35) நான் சிசிக்சைக்கு சேர்ந்த போது மருத்துவமனையின் விபத்து பதிவவேட்டு நகலில் எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரணமானது என்று எழுதி உள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது.

36) விபத்து பதிவேட்டு நகலில் எனக்கு கத்தியால் காயம் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு உள்ளார்கள் என்றால் நைப் என்று எழுதி உள்ளார்கள்.

37) நைப் என்றால் கத்தி தான் என்றால் மருத்துவரின் கருத்துப்படி அதன் அர்த்தம் வேறு.

38) கிருஷ்ணகிரி மாருதி மருத்துவ நர்சிங் ஓம்மில் 20.02.2017 முதல் 05.03.2017 வரை உள் நோயாளியாக சிகிச்சை பெற்றதாக மருத்துவ ஆவணங்கள் உள்ளது என்றால் சரிதான். 19.02.2017 அன்று இரவே அந்த மருத்துவமனைக்கு நான் சிசிக்சைக்கு சென்று விட்டேன்.

39) 19.02.2017 அன்று இரவு 9 மணிக்கு நான் மாருதி நர்சிங் ஓம்மிற்கு சிகிச்சைக்கு சென்றேன்.

40) 19.02.2017 அன்று நான் மாருதி நர்சிங்க ஓம்மிற்கு சென்றதாக அந்த மருத்துவ ஆவணங்களில் குறிப்பிடாததால் நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.
41) கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ள மருத்துவ ஆவணங்களில் குறிப்பபிட்டுள்ள காயங்களின் விவரங்களுக்கும் நான் மாருதி நர்சிங்க ஓம்மில் வாங்கப்பட்டுள்ள மருத்துவ ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள காயங்களின் விவரங்களுக்கும் பெருமளவு மாறுபாடு உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது.
42) மாருதி நர்சிங் ஓம்மின் நான் வெளிவந்த பின்பு எனது மாமா மாது எனது விடுப்பு சான்றிதழை போலிசாரிடம் கொடுத்துள்ளார்.
43) 11.11.2021 அன்று எதிரிகளுக்கு வழங்கப்பட்ட நகல்களில் மாருதி நர்சிங் ஓம்மில் இருந்து நான் விடுப்பு செய்யப்பட்ட நாள் 05.02.2017 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த ஆவணத்தின் மேல் பகுதியில் 05.03.2017 என்று உள்ளது. முடிவு பகுதியில் 05.02.2017 என்று உள்ளது.
44) எதிரிகளுக்கு நகல் வழங்கிய பின்பு அந்த ஆவணத்தில் உள்ள 05.02.2017 என்பது 05.03.2017 என்று திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.
45) மாருதி நர்சிங் ஓம்மில் வழங்கபட்டுள்ள மருத்துவ ஆணங்கள் சம்பவம் நடப்பதற்கு முன்பே தயார் செய்யப்ட்டுள்ளது என்றால் சரியல்ல.
46) எனக்கு விடுப்பு சான்றிதழ் வழங்கிய மாருதி நர்சிங் ஓம் மருத்துவர் செந்தில் நாதன் அரசு தரப்பில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் அது எனக்கு தெரியாது.
47) மாருதி நர்சிங் ஓம் மருத்துவமனையில் வழங்கிய சரியில்லாத நம்பக தன்மை இல்லாத மருத்துவ ஆவணங்களின் அடிப்படையில் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் காயச்சான்றதிழ் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.
48) நான் ஒசூர் காவேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன்.
49) என்னிடம் காட்டப்படுவது நான் ஒசூர் காவேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான சிக்ச்சை சான்றிதழ்.
50) மேற்படி விடுப்பு சான்றிதழில் நான் தவறி கீழே விழுந்ததில் எலும்பு முறிவு ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது எனறால் சரியல்ல.
51) 31.03.2017 ம் தேதியில் காவேரி மருத்துவமனையில் வழங்கிய விடுப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் **எ.த.சா.ஆ.1.** (மேற்படி ஆவணத்தை மருத்துவரை விசாரணை செய்யாமல் குறியீடு செய்யக்கூடாது என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டு ஆட்சேபணையுடன் குறயீடு

செய்யப்பட்டது)

52) இந்த வழக்கின் 5ம் சாட்சி வெங்கடேஷ் குமார் எனது வழக்கறிஞர் மற்றும் எனது சீனியர் வழக்கறிஞர்.

53) எதிரிகள் மீது 8 நாட்கள் காலதாமதமாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது நான் மருத்துவமனையில் இருந்தேன்.

54) 27.02.2017 அன்று தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது நான் அப்போது மருத்துவமனையில் இருந்தேன்.

55) முதலில் எதிரிகள் மீது இதச 341, 324, 427, 506(2) ன் படி வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் ஆமாம் மருத்துவமனையில் இருந்து வந்த பின்பு எனக்கு தெரியும்.

56) முதலில் கிருஷ்ணகிரி மருத்துவமனையில் எனக்கு ஏற்பட்டகாயம் சாதாராணமானது என்று பதிவு செய்துள்ளார்கள் என்றும் அதன்பின்பு எனக்கு சாதகாமாக உள்ள மருத்துவமனையில் சேர்ந்து தவறுதலாக மருத்துவ சான்றிதழ் வாங்கி அதன் அடிப்படையில் எனக்கு தெரிந்த வழக்கறிஞர்களின் செல்வாக்கினால் சட்டப்பரிவினை 307 இதச வாக மாற்றம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

57) எங்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கு எண்.சிசி 62/2023 ரத்து செய்யப்பட்டது என்பதற்கான ஆணத்தை நான் நீதிமன்றத்தில் கொடுக்கவில்லை என்றால் ஆமாம்.

58) என் மீது பதிவு செய்யப்ட்ட வழக்கு ரத்து செய்யப்பட்டு விட்டது என்று நான் சொல்வது தவறானது என்றால் சரியல்ல.

59) சிவில் வழக்குகள் மற்றும் மேல் முறையீட்டில் ஏற்பட்ட தோல்வியை தாங்க முடியாமல் எதிரிகளை கிரிமினல் வழக்கில் சேர்த்துவிட்டு அவர்களை பணிய வைக்க வேண்டும் என்று பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் என்னை வெட்டியது 2017ம் வருடம் அப்போது சிவில் வழக்கு நிலுவையில் இருந்தது.

60) இந்த வழக்கில் தாக்கல் செய்யயப்பட்டு இருக்கும் இறதி அறிக்கையும் பார்ம் 95 ம் சொல்லி உள்ள அளவுகளை விட நீதிமன்றத்தில் உள்ள சான்று பொருளின் அளவு மாறுபாடாக உள்ளதால் நீதிமன்றத்தில் உள்ள சான்று பொருளுக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

61) நீதிமன்றத்தில் உள்ள சான்று பொருளை அளந்து பார்த்தால் அது குற்ற இறுதி அறிக்கையிலும் பார்ம் 95ம் உள்ள அளவீடுகளை விட மாறுபாடாக உள்ளதால் நீதிமன்றத்தில் உள்ள சான்று பொருளுக்கும்

வழக்கில் குறிப்பிட்டு உள்ள சான்று பொருளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

62) நீதிமன்றத்தில் உள்ள சான்று பொருளின் அளவு 45 செ.மீ அளவில் உள்ளது என்றால் என்னை வெட்டியது அந்த கொடுவாளால் தான் அந்த அளவு பற்றி எனக்கு தெரியாது.

63) நீதிமன்றத்தில் உள்ள சான்று பொருளின் அளவு 17.5 இன்ச் என்றால் அது எனக்கு தெரியாது ஆனால் என்னை வெட்டிய கொடுவாள் அது தான்.

64) எதிரிகள் என்னை வெட்டியவுடன் சா.பொ.1 ஐ அருகில் உள்ள புதிரில் வீசி விட்டார்கள்.

65) சா.பொ.1 ஆல் நான் வெட்டப்பட்டு இருந்தால் அந்த ஆயுதத்தில் இரத்தம் மற்றும் சதை பகுதிகள் ஒட்டி இருக்கும் என்றால் ஆமாம்.

66) நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ள காயங்களின் தன்மைக்கும் காயச்சான்றிதழில் குறிப்பிட்டுள்ள காயங்களின் தன்மைக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல.

67) வழக்கில் குறிப்பிட்டு உள்ள காயங்களின் இடங்களுக்கும் மருத்துவ ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள காயங்களின் இடங்களுக்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல.

68) நான் சொல்லும் சாட்சியத்திற்கும் மருத்துவ ஆதாரங்கள் இல்லாதால் நான் பொய் சொல்வது தெரியவருகிறது என்றால் சரியல்ல.

69) நான் வழக்கறிஞராக பார் கவுன்சிலில் பதிவு செய்வதற்கு வழக்கை வாப்பஸ் பெறும் படி எதிரிகளை கேட்டேன் என்றும் அவர்கள் ஒப்புக்கொள்ளாததால் நான் எனது செல்வாக்கை பயன்படுத்தி எதிரிகள் மீது பதிவு செய்யப்பட்ட இதச 324 வழக்கை 307 ஆக மாற்றி உள்ளேன் என்றால் சரியல்ல.

70) இந்த வழக்கானது ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது மறுவிசாரணை இல்லை.**

**ஓம்./எல்.கலைவாணி,பி.எ.,பி.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**

**06.03.2024**

**SC.No.- 130/2021**

**PW- 2 – திரு. மாது**

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1 சத்தியமாக சொல்கிறேன். நான் தற்போது சொன்னம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 திருப்பதியில் சட்டக்கல்லூரியில் படித்து வந்தார். விடுமுறை காலத்தில் வீட்டிற்கு வந்தார். காஞ்சாலம் கிராமத்தில் எனது உறவினர் இறந்துவிட்டார். அதை பார்ப்பதற்காக அ.சா.1 ம் அவரது அம்மாவும் சென்றார்கள். என் தங்கையை விட்டுவிட்டு அ.சா.1 திரும்ப வந்துள்ளார். ஏற்கனவே அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் 2011 ம் வருடம் நிலத்தகராறு இருந்தது. அ.சா.1 கோடிபுதுரில் வந்த போது எதிரி செல்வராஜ் வண்டி ஓட்டி இருந்தார். முருகன் பின்னால் அமர்ந்து வந்தார். எதிர் புறம் வந்து வண்டியை நிறுத்தி விட்டு அ.சா.1 ஐ வெட்ட வந்துள்ளார்கள். அவர் சாய்ந்து விட்டார் அதனால் அவரது இடது காலில் வெட்டு உழுந்தது. அதன்பின்பு எதிரி செல்வராஜ் ஓடுகிறான் காலை முதலில் வெட்டு என்று சொல்லி உள்ளார். இன்றோடு கிளோஸ் என்று சொல்லி முருகன் அ.சா.1 ஐ வெட்டி உள்ளார். நான் பக்கத்தில் கொள்ளு பயிர் செய்து இருந்தேன். நான் ஓடி வந்து கத்தினேன். வந்தால் உன்னையும் வெட்டாமல் விடுவதில்லை என்று முருகன் சொன்னார். மற்றவர்கள் வருவதற்குள் வண்டியை எடுத்து கொண்டு எதிரிகள் சென்றுவிட்டார்கள். நான் அ.சா.1 ஐ இராயக்கோட்டை அரசு மருத்துவனைக்கு அழைத்து கொண்டு சென்றேன். எனது தங்கை மாதம்மாவிற்கு போன் செய்து நடந்த விவரத்தை சொன்னேன். எனது தம்பி சண்முகத்துக்கும் போன் செய்து தகவல் சொன்னேன். அதன்பின்பு வழக்கறிஞர் வெங்கடேஷ் குமாருக்கு போன் செய்து தகவல் சொன்னேன். அ.சா.1 க்கு முதல் உதவி சிகிச்சை இராயக்கோட்டை மருத்துவமனையில் வழங்கினார்கள். வெட்டு காயம் அதிகாமாக உள்ளது கிருஷ்ணகிரிக்கு செல்லுங்கள் என்று சொன்னார்கள். ஆம்புலன்ஸ் வரவில்லை வெங்கடேஷ் குமார் வழக்கறிஞருடன் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சென்றார். கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் மாலை வரை அ.சா.1 சிகிச்சை பெற்றார். அதன்பின்பு தனியார் மருத்துவமனைக்கு அ.சா.1 சிகிச்சையில் சேர்ந்தார். மாருதி நர்சிங் ஓம்மில் அ.சா.1 15 நாள் சிகிச்சை பெற்றார். அ.சா.1 அதன்பின்பு படிப்பதற்காக சென்றார். 4, 5 நாள் கழித்து கால் வலி ஏற்பட்டதால் அ.சா.1 ஊருக்கு வந்தார். அ.சா.1 ஐ ஒசூர் காவேரி மருத்துவமனையில் சிகிச்சையில்

சேர்த்தோம். மருத்துவமனையில் அ.சா.1 காலில் சீல் பிடித்துள்ளதாக சொல்லி மறு சிசிக்சை செய்து ராடு வைத்தார்கள். போலிசார் ஊருக்கு வந்தார்கள். அவர்கள் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) அ.சா.1 குடும்பத்திற்கும் எதிரி குடும்பத்திற்கும் நில தகராறு தொடர்பாக பல வருடமாக முன் விரோதம் உள்ளது.
2) அ.சா.1ன் அம்மா அவர்களை ஊரில் இருந்து விலக்கி வைத்துள்ளார்கள் என்று எதிரிகள் மீதும் மற்றும் 11 பேர் மீதும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அது நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம்.
3) எதிரிகள் வந்த இருசக்கர வாகனம் என்ன வகையானது பதிவெண் என்ன என்ற விவரத்தை நான் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.
4) உடைக்கப்பட்டதாக சொல்லப்படும் செல்போன் என்ன ஆனது என்று எனக்கு தெரியாது.
5) சம்பவ இடத்தில் இருந்து போலிசார் இரத்தக்கரையை கைப்பற்றினார்களா என்றால் போலிசார் 10 நாள் கழித்து தான் சம்பவ இடம் வந்தார்கள்.
6) இந்த வழக்கு சம்பவ தேதியில் எதிரிகளை நாங்கள் வெட்டியதாக போலிசார் என் மீதும், அசா.1 மீதும் சண்முகம் என்பவர் மீதும் வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் ஆமாம் ஆனால் நாங்கள் உயர் நீதிமன்றம் சென்று வழக்கை ரத்து செய்துவிட்டோம்.
7) கொடுவாள் வேறு, கத்தி வேறு என்றால் சரிதான்.
8) அ.சா.1 எனது தங்கை மகன்.
9) இராயக்கோட்டை மருத்துவமனையில் அ.சா.1 சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ ஆவணங்களை நான் பெறவில்லை.
10) இராயக்கோட்டை மருத்துவமனையில் இருந்து மருத்துவ சான்றிதழை வாங்கி அ.சா.1 ஐ கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் கொடுத்து நான் சேர்க்கவில்லை.
11) கிருஷ்ணகிரி மாருதி நர்சிங்க ஓம்மில் வழங்கிய விடுப்பு சான்றிதழை நான் வாங்கி சென்று போலிசாரிடம் கொடுத்தேன்.
12) சம்பவம் நடந்து சுமார் 25 நாள் கழித்து மாருதி நர்சிங் ஓம்மில் மருத்துவ சான்றிதழ் வாங்கி சென்றேன்.
13) காயம்பட்ட அ.சா.1 ஐ அவர் வழக்கறிஞர் வெங்கடேஷ் குமார் அவரது இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்றதாக அ.சா.1 நீதிமன்றத்தில் சொல்லி உள்ளார் என்றால் நான் தான் அழைத்து சென்றேன்.
14) சம்பவத்தன்று அ.சா.1 வெள்ளை சட்டையும் ஜீன்ஸ் பேண்ட்டும்

அணிந்து இருந்தார்.

15) பேன்ட் அணிந்து இருக்கும் நபரை ஒருவர் வெட்டினால் அவருடைய பேன்ட் வெட்டுப்பட்ட பின்பு தான் அவரது உடலில் காயங்கள் ஏற்படும் என்றால் ஆமாம்.
16) அ.சா.1 ன் பேன்ட் வெட்டுப்பட்டு இருந்தது. அ.சா.1 ஐ வெட்டிய ஆயுதம் கூர்மையாக இருந்தது.
17) சம்பவத்தன்று அ.சா.1 ஐ வெட்டியதாக சொல்லும் ஆயுதம் வெள்ளையாக இருந்தது.
18) அ.சா.1 ன் இரத்தம் அவரது பேன்டில் பட்டு இருந்தது.
19) வெட்டுப்பட்ட பேன்ட்டை போலிசிடம் காண்பித்தோம் அவர்கள் வாங்கி வைத்து கொண்டார்கள்.
20) வெட்டுப்பட்ட பேன்ட்டில் இரத்தம் படிந்து இருந்தது.
21) நான் சம்பவ இடத்தில் இருந்து 50 மீ தொலைவில் இருந்தேன்.
22) 50 மீ தூரத்தை ஒரு செக்னட்டில் நான் நடத்து வந்துவிட்டேன்.
23) 50 மீட்டர் தூரத்தை ஒரு செக்கன்டு நேரத்தில் மனிதர்களால் கடந்து செல்ல முடியாது என்றால் ஆமாம் 5 செக்கன்ட்டில் வந்து இருக்கலாம்.
24) 5 செக்கன்டிலும் வரமுடியும் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.
25) அரசு தரப்பில் சொல்லி இருக்கும் ஒரு சம்பவம் நடைப்பெறவில்லை என்றும் அ.சா.1 எனது தங்கை மகன் என்பதால் நடக்காத சம்பவம் நடந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
26) சிவில் வழக்கு முன் விரோதம் காரணமாக அ.சா.1 பொய் புகார் கொடுத்துள்ளார் என்றும் அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
27) என்னிடம் காட்டப்படும் கிருஷ்ணகிரி மருத்துவமனையில் இருந்து பெற்று வந்த மருத்துவ சான்றிதழா என்றால் அது என்னால் சொல்ல முடியாது எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது.
28) எதிரிகளை நாங்கள் தான் வெட்டினோம் என்றும் எதிரிகள் மீது பொய் வழக்கு போட்டு விட்டு எதிரிகளை சொத்தில் இருந்து வெளியேற்ற முயற்சி செய்கிறோம் என்றும் அதற்காக நான் தற்போது பொய் சாட்சியம் அளிக்றேன் என்றால் சரியல்ல.
29) நான் சாட்சியத்தில் சொல்லி உள்ளது போல் அ.சா.1 க்கு காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது மறுவிசாரணை இல்லை.**

**ஓம்./எல்.கலைவாணி,பி.எ.,பி.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**

06.03.2024

**SC.No.- 130/2021**

**PW- 3 – திரு.மாதம்மாள்**

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1 சத்தியமாக சொல்கிறேன். நான் சொன்னேயம்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 எனது மகன். என் மகன் ஆந்திரா திருப்பதில் உள்ள அம்பேத்கர் சட்ட கல்லூரியில் சட்டம் படித்தார். ஒருமாத பயிற்சிக்காக என் மகன் வீட்டிற்கு வந்து இருந்தார். ஒசூர் வெங்கடேஷ் குமார் வழக்கறிஞரிடம் எனது மகனை அனுப்பி இருந்தேன். பயிற்சிக்கு சென்று விட்டு தினமும் என் மகன் வீட்டிற்கு வருவார். கோடிபுதுர் அருகில் எனது சொந்த நிலம் உள்ளது. எதிரிகளுக்கு எங்கள் நிலத்திற்கு அருகில் நிலம் உள்ளது. 2011 முதல் எங்களுக்கும் எதிரிகளுக்கும் நில பிரச்சனை உள்ளது. காஞ்சாலத்தில் எனது உறவினர் இறந்துவிட்டர். 19.02.2017 அன்று அ.சா.1 ஐ என்னை இறப்பிற்கு அழைத்து செல்லும் படி சொன்னேன். அவர் அவரது இருசக்கர வாகனத்தில் என்னை இறப்பிற்கு அழைத்து சென்றார். என்னை விட்டுவிட்டு அ.சா.1 திரும்ப வந்து கொண்டு இருந்தார். கோடிபுதுர் மாரியம்மன் கோவில் அருகில் எதிரிகள் அ.சா.1 வண்டியை தடுத்து நிறுத்தி எதிரி செல்வராஜ் தலையை வெட்ட வந்துள்ளார். அவர் வளைந்து கொண்டதால் தான் காலில் வெட்டி உள்ளார்கள். அ.சா.1 போன் கீழே விழுந்து உள்ளது அதை எடுத்து செல்வராஜ் உடைத்துள்ளார். செல்வராஜ் முருகனை பார்த்து இவன் ஓடிவிடுவான் காலை வெட்டு என்று சொல்லி உள்ளார். இனிமேல் நிலத்திற்கு அருகில் வந்தால் உயிருடன் விடமாட்டோம் என்று சொல்லி உள்ளார்கள். பக்கத்தில் இருந்தவர்கள் வந்ததாதல் எதிரிகள் அவர்களது வண்டியில் திரும்பி சென்றுள்ளார்கள். இனிமேல் யாராவது நிலத்திற்கு அருகில் வந்தால் முடிக்காமல் விடமாட்டோம் என்று சொல்லி உள்ளார்கள். மேற்படி சம்பவத்தை போனில் அ.சா.2 மாது என்னிடம் சொன்னார். நான் என் மகனை இராயக்கோட்டை அரசு மருத்துவமனையில் போய் பார்த்தேன். நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். வழக்கறிஞர் வெங்கடேஷ் குமார் வந்து எங்களது வண்டியில் அ.சா.1 ஐ கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளார். என்னை போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) அந்த தேதியில் யார் இறந்தார்கள் என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் நான் சொல்லி உள்ளேன்.
2) நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் எனது அண்ணன் மாது சொல்லி தான் எனக்கு தெரியும்.
3) சம்பவ இடத்தில் நான் இல்லை.
4) நான் நேரடியாக இராயக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று தான் அ.சா.1 ஐ பார்த்தேன்.
5) சம்பவத்தின் போது எனது மகன் காக்கி நிற பேன்ட் அணிந்து இருந்தார். அது என்ன வகையான பேன்ட் என்று எனக்கு தெரியாது.
6) பேன்ட்டில் ரத்தம் படிந்து இருந்ததா என்று எனக்கு ஞாபகம் இல்லை.
7) அந்த பேன்ட்டை என்ன செய்தார்கள் என்று எனக்கு தெரியாது
8) அந்த பேன்ட்டை நான் வருவதற்குள் கழட்டி இருந்தார்கள்.
9) எதிரிகளுக்கும் எனது கணவருக்கும் நில பிரச்சனை தொடர்பாக சிவில் வழக்கு நடந்தது.
10) கட்டப்பஞ்சாயத்து செய்தார்கள் என்னை ஊரில் இருந்து விலக்கி வைத்தார்கள் என்று எதிரிகள் மற்றும் 11 பேர் மீது தனிப்புகார் கொடுத்து அந்த வழக்கு குற்றவியல் நீதிமன்றத்தில் சிசி எண்.330/2015 என்று நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம்.
11) சிசி வழக்கு எண்.330/2015 வழக்கில் என் சார்பாக வழக்கறிஞர் வெங்கடேஷ் குமார் என்றால் ஆமாம்.
12) நில சம்மந்தப்பட்ட வழக்கிற்கு கங்காதரன் வழக்கறிஞரை நியமனம் செய்து இருந்தோம்.
13) போலிசார் சம்பவம் நடந்து 20 நாள் கழித்து விசாரித்தார்கள்.
14) என் மகன் கிருஷ்ணகிரியில் சிகிச்சை பெற்ற போது ஒரு நாள் போய் பார்த்தேன். சம்பவம் நடந்து 3 நாள் கழித்து நான் அ.சா. 1 ஐ போய் பார்த்தேன்.
15) அ.சா.1 ஐ நான் காவேரி மருத்துவனையில் போய் பார்த்தேன்.
16) நான் சொல்வது பொய் என்றும் சம்பவம் நடந்து 3 நாளில் அ.சா.1 காவேரி மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் இல்லை நான் அங்கு தான் போய் பார்த்தேன்.
17) அ.சா.1 சம்பவம் நடந்து 3 நாளில் காவேரி மருத்துவமனையில் இல்லை என்றும் வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
18) உண்மையில் அ.சா.1 வெட்டப்பட்டு இருந்தால் நான் மருத்துவமனைக்கு போய் பாத்து இருப்பேன் என்றும் அ.சா.1 ஐ நான் மருத்துவமனையில் போய் பார்த்தாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

19) எதிரிகளை மிரட்டி பணிய வைத்து சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் பொய் சட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

20) எனக்கு காவல் நிலையத்திலும் ஊரிலும் உள்ள செல்வாக்கை பயன்படுத்தி எதிரிகளின் சொத்தை அபகரிக்க பார்க்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது மறுவிசாரணை இல்லை.**

**ஓம்./எல்.கலைவாணி,பி.எ.,பி.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**

06.03.2024

**SC.No.- 130/2021**

**PW- 4 – திரு.வெங்கடேஷ் குமார்.**

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1 சத்தியமாக சொல்கிறேன். நான் நெல்லூரில் வசிக்கிறேன். வழக்கறிஞராக தொழில் செய்கிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளையும் எனக்கு தெரியும். கடந்த 19.02.2017 அன்று நான் வீட்டில் இருந்தேன். சுமார் 10.00 மணிக்கு மாது என்பவர் எனக்கு போன் செய்தார். அ.சா.1 அவரது தாயாரை காஞ்சாலம் கிராமத்தில் ஒரு துக்கத்திற்கு அழைத்து சென்று விட்டுவிட்டு திரும்பி வரும் போது கோடிபுதுர் மாரியம்மன் கோவில் அருகில் ஆஜர் எதிரிகள் அ.சா.1 ஐ தடுத்து நிறுத்தி கொலை செய்யும் நோக்கத்தில் வெட்டியதாகவும் அந்த இடத்தில் அ.சா.1 வண்டியுடன் கீழே விழுந்து விட்டதாக மாது என்பவர் என்னிடம் சொன்னார். ஆஜர் எதிரி செல்வராஜ் அ.சா.1 ஓடி விடக்கூடாது காலை வெட்டு என்று சொன்னதால் எதிரி முருகன் அ.சா.1 ன் காலை வெட்டியதாக எனக்கு தகவல் சொன்னார்கள். அ.சா.1 இராயக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை பெற்று வருவதாக சாட்சி மாது எனக்கு சொன்னார். அங்கு வரும்படி கேட்டு கொண்டார். நான் அ.சா.1 ஐ இராயக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில் போய் பார்த்தேன். அவருக்கு முதல் உதவி செய்து கொண்டு இருந்தார்கள். அவரது வலது காலின் முட்டியிலும், கணுக்காலிலும் காயம் இருந்தது. அ.சா.1 ஐ நான் வண்டியில் அழைத்து சென்று கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். 10 கழித்து போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்ததை சொன்னேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை சம்பவம் பற்றி கேள்விப்பட்டு சென்றேன்.

2) சம்பவ தேதியில் அ.சா.1 எதிரிகளை வெட்டியதாக ஒரு சம்பவத்தை கேள்விப்பட்டேனா என்றால் இல்லை ஒரு மாதம் கழித்து முதல் தகவல் அறிக்கையை ஆன்லைனில் எடுத்து ரத்து செய்வதற்காக அனுப்பி

வைத்தோம்.

3) அந்த வழக்கு குற்ற எண்.55/2017 இதச 294, 323, 324, 506(2) என்று சொன்னால் அது அப்போது தெரியாது பின்பு நகலை பார்த்து தெரிந்து கொண்டோம்.
4) அந்த வழக்கு ரத்து செய்யப்பட்டு விட்டது.
5) நான் சொல்வது தவறு என்றும் அந்த குற்ற எண் ரத்து செய்யப்படவில்லை என்றும் இன்றும் அ.சா.1 தரப்பு மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை சிசி 62/2023 என்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது
6) நான் சொல்வது போல் முதல் தகவல் அறிக்கை ரத்து செய்யப்பட்டு இருந்தால் போலிசார் இறுதி அறிக்கை தாக்கல் செய்து இருக்கமாட்டார்கள் என்றால் அது எனக்கு தெரியாது உத்தரவு நகல் என்னிடம் உள்ளது.
7) அ.சா.1 க்கு உண்மையில் காலில் வெட்டப்பட்டு எலும்பு முறிவு ஏற்பட்டு இருந்தால் அவரை என்னால் இருசக்கர வாகனத்தில் இராயக்கோட்டையில் இருந்து கிருஷ்ணகிரிக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்று இருக்க முடியாது என்றால் சரியல்ல. அ.சா.1 க்கு இராயக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில் கட்டு போட்டு முதல் உதவி செய்து இருந்தார்கள். காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரை ஆம்புலன்ஸ் வரவில்லை. அதனால் தான் நான் அவரை இருசக்கர வாகனத்தில் சிகிச்சைக்கு அழைத்து சென்றேன்.
8) சம்பவம் பற்றி இராயக்கோட்டை காவல் நிலையத்திற்கு இராயக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருந்த போது நான் தகவல் சொல்லவில்லை. கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் இருந்த போது தகவல் சொன்னோம்.
9) இராயக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தில் அ.சா.1 க்கு முதல் உதவி சிகிச்சை அளித்ததற்கான மருத்துவ அவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அது எனக்கு தெரியாது.
10) உண்மையில் சம்பவம் நடைப்பெற்று இருந்து இருந்தால் அ.சா.1 ஆரம்ப சுகாதார நிலையம் இராயக்கோட்டையில் சிகிச்சை பெற்று இருந்தால் அது குறித்த தகவல் காவல் நிலையத்திற்கு உடனடியாக தெரிவிக்கபபட்டு இருக்கும் என்றால் சரியல்ல அ.சா.1 க்கு காயம் ஏற்பட்டு இருந்தது அவரை காப்பற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் தான் இருந்தேன்.
11) கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் நான் தான் அ.சா.1 சிசிக்சைக்கு சேர்த்தேன்.

12) கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் வழங்கிய மருத்துவ ஆவணங்களில் அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் சாதாரணமானது என்று எழுதி உள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது.

13) அ.சா.1 ஐ நான் இராயக்கோட்டை அரசு மருத்துவமனையில் போய் பார்த்த போது அவரது உடைகளில் இரத்த கரை படித்து இருந்ததா என்றால் நான் போய் பார்த்த போது அவருக்கு சிகிச்சை அளிப்பதற்காக பேன்ட் அகற்றப்பட்டு அவர் லுங்கி அணிந்து இருந்தார்.

14) அவர் சம்பவத்தின் போது அணிந்து இருந்ததாக சொல்லும் பேன்ட் என்ன ஆனது என்று எனக்கு தெரியாது.

15) அ.சா.1. குடும்பத்திற்கும் எதிரிகளுக்கும் பல வருடமாக நில பிரச்சனை உள்ளது என்றால் 2011 முதல் நில பிரச்சனை இருப்பதாக கேள்விப்பட்டேன் அதனால் அ.சா.1 குடும்பத்தை ஊரில் இருந்து பஞ்சாயத்து பேசி விலக்கி வைத்துள்ளார்கள்.

16) ஊரில் இருந்து விலக்கி வைத்ததாக அ.சா.1 ன் தாயார் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரானது பொருண்மை தவறு என்று முடிக்கப்பட்டு விட்டதால் அவர் அ.சா.1 .ன தாயார் தனிப்புகார் குற்றவியல் நீதிமன்றத்தில் என் மூலம் தாக்கல் செய்து இருந்தார் என்றால் வழக்கு முடிக்கப்படவில்லை போலிசார் நடவடிக்கை எடுக்காததால் அ.சா.1ன் தாயார் தனிப்புகார் தாக்கல் செய்தார். அதன் பின்பு அந்த புகாரில் உள்ள எதிரி ஒருவர் அந்த வழக்கை நடத்த கூடாது என்று என்னை கொலை செய்ய முயற்சி செய்தார் அதற்கு நான் ஒரு புகார் கொடுத்து அந்த வழக்கு குற்றவியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

17) அ.சா.1 ன் தாயார் தாக்கல் செய்துள்ள சிசி.330/2015 வழக்கை நான் தான் நடத்துகிறேன்.

18) ஊர் கட்டப்பஞ்சாயத்தில் கொலை செய்தால் கூட யாரும் சாட்சி சொல்லகூடாது என்று தீர்மானம் செய்துள்ளார்கள் அதனால் தான் அந்த வழக்கை நடத்துகிறேன்.

19) அந்த வழக்கில் நான் 3 சாட்சிகளை விசாரணை செய்துள்ளேன். அதில் ஒரு எதிரி சம்பவம் நடந்தது உண்மை என்று ஒப்புக்கொண்டு உள்ளார்.

20) எதிரியை அப்பூர்வர் ஆவதற்கு மனு தாக்கல் செய்து செய்துள்ளார்.

21) அந்த தனி புகார் வழக்கில் எதிரிகள் யாரும் அப்பூர்வர் ஆவதற்கு அனுமதி மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மணி என்ற எதிரி மனு தாக்கல் செய்து அது அனுமதிக்ககப்பட்டுள்ளது.

22) நான் சொல்வது போல் மணி என்ற எதிரி அப்பூர்வர் ஆவதற்கு அனுமதி கேட்டு மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

23) அ.சா.1 என்னிடம் தற்போது ஜீனியர் வழக்கறிஞராக உள்ளார்.

சம்பவத்தின் போது இன்டன்சிப்பாக என்னிடம் பயிற்சிக்கு வந்தார்.

24) அசா.1 2021ல் இருந்து என்ரோல்மன்ட் செய்துவிட்டு அதன்பின்பு என்னிடம் பயிற்சிக்கு வருகிறார்.
25) இன்டன்சிப்காக அ.சா.1 2017 , 2018, 2019 ஆகிய வருடங்களில் என்னிடம் பயிற்சிக்காக வந்தார்.
26) 2017 வருடத்திற்கு முன்பே அசா.1 குடும்பத்தை எனக்கு தெரியும். அ.சா.3 2015 ல் என்னிடம் தனி புகார் தாக்கல் செய்ய வந்தார்.
27) இந்த வழக்கு எதிரி என்னை கொலை செய்ய வந்ததாக நான் புகார் கொடுக்கவில்லை அவர் வேறு நபர். அவர் பெயர் முருகன் த/பெ.முனியன் .
28) அ.சா.1 எனது ஜூனியர் வழக்கறிஞர் என்பதாலும் அ.சா.3 க்கு நான் வழக்கு நடத்தி வருவதாலும் எதிரிகளுக்கும் அசா.1 குடும்பத்திற்கும் உள்ள முன் விரோதத்தால் நான் அ.சா.1 குடும்பத்திற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது மறுவிசாரணை இல்லை.**

**ஓம்./எல்.கலைவாணி,பி.எ.,பி.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**

**06.03.2024**

**SC.No.- 130/2021**

**PW- 5 – திரு.சண்முகம்**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

1 சத்தியமாக சொல்கிறேன். நான் சொன்னேபட்டியில் வசித்து வருகிறேன். ஆசிரியர் பணி செய்கிறேன. நான் தற்போது காவேரிபட்டினம் பக்கத்தில் உள்ள விநாயக வித்யாலய பள்ளியில் பணி புரிந்து வருகிறேன். சம்பவத்தின் போது விஜய் வித்யாலையா பள்ளியில் கிருஷ்ணகிரியில் இருந்தேன். அ.சா.1 ஐ தெரியும் எதிரிகளை தெரியும். 19.02.2017 அன்று நான் நெடுங்கல்லில் இருந்தேன். நான் என் மனைவியை நெடுங்கல்லுக்கு அழைத்து சென்றேன். காலை 9.30 மணிக்கு எனது அண்ணன் மாது எனக்கு போன் செய்தார். நமது உறவினர் காஞ்சாலம் கிராமத்தில் இறந்துவிட்டார். அவரது இறப்பிற்கு அசா.1 அவரது அம்மாவை அழைத்து சென்றுள்ளார். திரும்பி வரும் போது எதிரிகள் அ.சா.1 ஐ வழி மறித்து தடுத்து அ.சா.1 ஐ கொலை செய்ய கழுத்தை வெட்டும் போது அ.சா.1 வளைந்துள்ளார். அதனால் வெட்டு காலில் பட்டுள்ளது. அப்போது போன் கீழே விழுந்து விட்டது. அந்த போனை செல்வராஜ் உடைத்து விட்டார் என்றும் அதன்பின்பு அ.சா.1 தப்பி ஓடும் போது செல்வராஜ் அவனை விடாதே கொலை செய்தாக வேண்டும் என்று முருகனை பார்த்து சொல்லி உள்ளார். அவனை காலை வெட்டு என்று சொல்லி உள்ளார். அதனால் அவர்கள் வெட்டியதில் அ.சா.1 கீழே விழுந்து விட்டதாகவும் பக்கத்தில் நிலத்தில் இருந்த மாது அங்கு ஓடி உள்ளார். இனிமேல் எதிரிகள் இனிமேல் நிலத்திற்கு அருகில் வந்தால் உங்களை கொடுவாளால் வெட்டுவோம் என்று கொடுவாளை காண்பித்துள்ளார்கள். மேற்படி சம்பவம் பற்றி அ.சா.2 மாது என்னிடம் சொன்னார். நான் இராயக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சென்று அ.சா.1 ஐ பார்த்தேன். அவருக்கு முதல் உதவி செய்து இருந்தார்கள். வலி அதிகமாக இருந்ததால் அரசு மருத்துவமனை கிருஷ்ணகிரிக்கு செல்லும் படி சொன்னார்கள். ஆம்புலன்ஸ் வரவில்லை. அதனால் வெங்கடேஷ் குமார் வழக்கறிஞர் அ.சா.1 இருசக்கர வாகனத்தில் மருத்துவனைக்கு அழைத்து சென்றார். கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் அ.சா.1 சிகிக்சைக்கு சேர்த்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள். மாலை 5 மணிக்கு மாருதி நர்சிங் ஓம்மில் அ.சா.1 சிகிச்சைக்கு சேர்த்தோம். 10 நாள் கழித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) சம்பவம் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது.
2) அ.சா.1 எனது அக்கா மகன்.
3) அ.சா.1 குடும்பத்திற்கும் எதிரிகளுக்கும் பல வருடமாக நில பிரச்சனை முன் விரோதம் உள்ளது.
4) எதிரிகள் மீது அ.சா.1 குடும்பத்தார் பல வழக்குகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் ஆமாம் எனக்கு தெரியும்.
5) பிரச்சனைக்கு பின்பு அ.சா.1 ஐ இராயக்கோட்டை அரசு மருத்துவனையில் சுமார் 11 மணிக்கு பார்த்தேன்.
6) அ.சா.1 சம்பவத்தின் போது வெள்ளை சட்டையும் கருப்பு புளு சேர்ந்த பேன்ட்டு அணிந்து இருந்தார்.
7) அது கிழிந்து விட்டதால் அரசு மருத்துவமனையில் பேன்ட்டை அகற்றி இருந்தார்கள். அந்த பேன்ட் என்ன ஆனது என்று நான் பார்க்கவில்லை.
8) நான் கிருஷ்ணகிரி மருத்துவனைக்கு சென்றேன்.
9) அ.சா.1 க்கு மருத்துவர் கிருஷ்ணகிரி மருத்துவமனையில் சிகிச்சை அளித்த விவரங்கள் ஓரளவிக்கு தெரியும்.
10) அ.சா.1 ஐ அன்றைய தினம் மாலை சுமார் 5.30 மணிக்கு அரசு மருத்துவமனையில் இருந்து விடுவித்தார்கள்.
11) அதன் பின்பு அ.சா.1 மாருதி நர்சிங் ஓம்மிற்கு அன்றைய தினம் மாலை சுமார் 6 மணிக்கு சென்றார்.
12) நான் அப்போது அ.சா.1 உடன் தான் இருந்தேன்.
13) மாருதி மருத்துவமனை ஆவணங்களின் படி பார்த்தால் நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல.
14) நான் சொல்லும் தேதியில் நேரத்தில் அ.சா.1 மாருதி நர்சிங் ஓம்மில் சேர்க்கப்படவில்லை என்றால் சரியல்ல.
15) அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது மறுவிசாரணை இல்லை.**

**ஓம்./எல்.கலைவாணி,பி.எ.,பி.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**

<u>06.03.2024</u>

**SC.No.- 130/2021**

**PW- 6 – திரு.அரிசந்திரன்**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

1 1. சத்தியமாக சொல்கிறேன். நான் சென்னேம்பட்டியில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 எனக்கு தெரியும். சுமார் 6, 7 வருடத்திற்கு முன்பு காலை 9 மணிக்கு கோடிபுதுர் பள்ளிக்கு பின்புறம் சென்று கொண்டு இருந்தேன். கூட்டமாக இருந்தார்கள். சத்தம் கேட்டது ஓடிபோய் பார்த்தேன். அங்கு 4, 5 பேர் இருந்தார்கள் கூட்டத்தில் ஒன்றும் புரியவில்லை. முருகனும் செல்வராஜும் இராயக்கோட்டை வழியாக வண்டியில் வந்தார்கள். 10 நாள் கழித்து நான் பள்ளி அருகில் சென்றேன். மதியம் 1 மணிக்கு இராயக்கோட்டை போலிசார் அங்கு வந்தார்கள். சம்பவ இடத்தை அடையாம் காட்டினேன் போலிசார் படம் வரைந்தார்கள். போலிசார் என்னிடம் கையெழுத்து போடும்படி கேட்டார்கள். நாகராஜ் முதலில் கையெழுத்து போட்டார் நான் 2வது கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த பார்வை மகஜர். **அ.த.சா.ஆ.2.** என்னை போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) அ.சா.1 க்கு நான் சின்ன தாத்தா.
2) போலிசார் வரைந்த படத்தில் கிழக்கு பக்கம் என்ன குறிப்பிட்டு உள்ளார்கள் என்று எனக்கு தெரியாது.
3) சாலையின் வலது புறம் பள்ளி கோவில், புளியமரம் ஓட்டுவீடு குறிப்பிட்டு உள்ளார்கள்.
4) நான் சொன்னபடி தான் போலிசார் எழுதி கொண்டு கையெழுத்து வாங்கினார்கள்.
5) நான் படிக்கவில்லை.
6) பார்வை மகஜரில் என்ன எழுதி உள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. எனக்கு படிக்க தெரியாது.
7) போலிசார் கேட்டதால் கையெழுத்து போட்டேனா என்றால் ஆமாம்.
8) நான் குடியிருக்கும் இடத்திற்கும் சம்பவ இடத்திற்கும் சுமார் 2 கி.மீ தூரம்

.

9) சம்பவ இடத்தில் வேறு நபர்கள் குடியிருக்கிறார்கள் என்றால் ஆமாம்.

10) அ.சா.1 ன் தாத்தா என்பதால் என்னிடம் போலிசார் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் ஊரில் கட்டுமானம் செய்துள்ளார்கள். யாரும் சாட்சி சொல்லகூடாது என்று சொல்லி உள்ளார்கள். எங்களுடன் யாரும் பேசினால் ரூ.50,000/- என்று ஊர்கட்டுமானம் செய்துள்ளார்கள்.

11) ஊர்கட்டுமானம் சம்மந்தமாக மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்து மாவட்ட ஆட்சியர் விசாரணை செய்து நாங்கள் சொல்வது பொய் என்று ஆட்சியர் அறிக்கை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

12) அ.சா.1 குடும்பத்தார் ஊரில் உள்ளவர்கள் மீது வழக்கு பதிப்பதால் ஊரில் உள்ளவர்கள் அ.சா.1 குடும்பத்துடன் சரியான உறவில் இல்லை என்றால் சரியல்ல.

13) எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும் அ.சா.1 எனது பேரன் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது மறுவிசாரணை இல்லை.**

**ஓம்./எல்.கலைவாணி,பி.எ.,பி.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**